





Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 291

திங்கட்கிழமை
15 செப்ரெம்பர் 2025

ஆவணி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


## வெப்பம் உச்சம்; அவதானம்

கொழும்பு, செப்.15
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளில் மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை இன்று எச்சரிக்கை மட்டத்தில் இருக்கக் 11



# தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பம்

### தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சி

யாழ்ப்பாணம், செப்.15
இந்திய அரசாங்கத்திடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பன்னிரெண்டு தினங்கள் அகிம்சை வழியில் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் 11

# அடுத்துவரும் இரு ஆண்டுகளுக்கு ஐ.நா. கண்காணிப்பில் இலங்கை!

### சமர்ப்பிக்கப்படவுள்ளது வரைவுத் தீர்மானம்



**கொழும்பு, செப்ரெம்பர் 15**
**இலங்கை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் இருக்கும் வகையில் வரைவுத் தீர்மானம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.** 11

## திலீபன் நாள் உங்களுக்கு; மாவீரதினம் எங்களுக்கு!

### நினைவேந்தல்களுக்கு முன்னணி போடும் 'டீல்'

யாழ்ப்பாணம், செப்.15
நல்லூரில் உள்ள தியாகதீபம் தீலீபனின் நினைவுத் தூபிக்கு அருகே கடந்த இரு ஆண்டுகளாக தியாக தீபம் திலீபனின் ஆவணக் 11

## அடுத்த ஆண்டு மார்ச்சில் மாகாணசபைத் தேர்தல்?

கொழும்பு, செப்.15
வரவு - செலவுத் திட்டக் கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர் 2026 மார்ச் மாதமளவில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக அரசாங்கம் பரிசீலித்துவருகின்றது என அறிய முடிகின்றது. 11

## சிறுமி துஷ்பிரயோகம் மறியலில் குடும்பஸ்தர்

முல்லைத்தீவு, செப்.15
புதுக்குடியிருப்பு, உடையார்கட்டில் 14 வயதுச் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். 11

### குடத்தனையில் பயங்கரம்

# வீட்டுக்குள் புகுந்த கும்பல் கொலைவெறித் தாக்குதல்

- 2 மணித்தியாலங்கள் வாள்முனையில் முற்றுகை
- மூவர் படுகாயம்; குடும்பம் இடம்பெயர்வு

வடமராட்சி, செப்.15
வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் உள்ள வீடொன்றை வாள்முனையில் சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் சுற்றிவளைத்து, வன்முறைக் குழுவொன்று மேற்கொண்ட தாக்குதலில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். நேற்று முன்தினம் 11

## சிறிநேசன் எம்.பி. விபத்தில் காயம்

கொழும்பு, செப்.15
மட்டக்களப்புமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் நேற்று மாலை 11



"எல்லாம் முடிஞ்ச பிறகு விடுப்பு பாக்கப் போறது தானே பொலிஸின்ர வேலை கண்டியளோ"

## இலங்கைக்கு கடத்தவிருந்த மஞ்சள் மீட்பு!

மன்னார், செப்.15
கடல்வழியாக இலங்கைக்குக் கடத்துவதற்காக வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 600 கிலோ எடை கொண்ட மஞ்சள் மூடைகளை தமிழக மரைன் பொலிஸார் மீட்டுள்ளனர். 08

## உடைமையில் 'ஐஸ்' இருவர் யாழில் கைது

யாழ்ப்பாணம், செப்.15
யாழ்ப்பாணத்தில் ஐஸ் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் வடமாகாண குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் யாழ்ப் 11

## ஹெரோய்னுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், செப்.15
யாழ்ப்பாணம், திருநகர் பகுதியில் ஹெரோயினை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த 11

## விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

விபத்தில் சிக்கிச் சிகிச்சை பெற்றுவந்தவர் உயிரிழந்துள்ளார். திருநெல்வேலியைச் சேர்ந்த வல்லிபுரம்மகா 11




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4194 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 40 73 76 80 |
| விசேட எழுத்து | F |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1261 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 09 12 34 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0220 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 2 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2300 |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 25 32 40 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5952 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 2 1 9 1 4 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1982 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 15 46 54 66 |
| விசேட எழுத்து | E |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0527 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 9 1 4 8 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0068 |
| வெற்றி இலக்கினம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 10 21 44 49 |

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் போர்க்குற்றம் புரிந்திருக்கலாம்

## விசாரணை நடத்தவேண்டும் என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

**யாழ்ப்பாணம், செப்.15**

**பொதுமக்கள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர போர்க்குற்றங்களில் ஈடுபட்டாரா, இல்லையா என்பதை அறிவதற்கு அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்தாலே உண்மைகள் வெளிவரும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் எந்தவிதமான போர்க்குற்றங்களும் இடம்பெறவில்லை. போரின்போது நிகழக்கூடாத சில விடயங்களே நடந்திருக்கலாம் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார். இதற்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
போர்க்குற்றங்கள் இலங்கையில் நடக்கவில்லை எனக் கூறுவது ஓர் அப்பட்டமான பொய். செம்மணிப் புதைகுழி விவகாரம் என்பதுவே ஒரு போர்க்குற்றம். அங்கு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டிருக்கின்றனர். போரின் இறுதி நாள்களில் பாதுகாப்பு வலயத்துக்குள் மக்களை அழைத்து, மோட்டார்க் குண்டு மூலம் தாக்கி, மக்களைக் கொன்றனர். அதுவே மிகவும் பாரதூரமான போர்க்குற்றம்.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் முதலில் இராணுவத்தில் இருந்தமையால், அவர் போர்க்குற்றம் இடம்பெறவில்லை என்றுதான் கூறுவார். எனவே அவரிடம் முழுமையான விசாரணை செய்தால், அவரும் போர்க்குற்றம் புரிந்தாரா இல்லையா என்பது தெரியவரும். போர்க்குற்றம் புரிந்தவர்களே அந்த விசாரணையைச் செய்யக்கூடாது. அவர்களால் மக்களுக்கு நீதி கிட்டாது. அதனால்தான் சர்வதேச விசாரணை தேவை என நாங்கள் தொடர்ச்சியாகக் கூறுகின்றோம். உண்மையாகவே போர்க்குற்றம் செய்யவில்லை என்றால் நீங்கள் யாருக்கும் அஞ்சவேண்டிய தேவை கிடையாது- என்றார். (க-27)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0660 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 7 0 1 6 3 8 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2926 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 14 21 29 33 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 25 65 71 78 |
| வெற்றி வாரம் | 5087 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0770 |
| வெற்றி இலக்கம் | 26 32 42 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ரிஷபம் | |
| வெற்றி இலக்கம் | 05 13 29 47 |
| சீட்டிழுப்பு வாரம் | 4638 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கம் | 09 30 43 59 |
| வெற்றி வாரம் | 2002 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 14.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 22 34 63 73 |
| வெற்றி வாரம் | 2752 |

# புதுப்பொலிவு பெறுகின்றது மருதானை ரயில் நிலையம்

கொழும்பு, செப்.15

கொழும்பு - மருதானை ரயில் நிலையத்தின் புதுப்பித்தல் பணிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. புதுப்பித்தல் நடவடிக்கையினூடாக, ரயில் நிலையத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் நவீனமயமாக்கப்படும்.

கொழும்பு நகரின் இரண்டாவது பெரிய ரயில் நிலையமாக மருதானை கருதப்படுவதுடன் நாட்டின் மிகவும் பழமையான ரயில் நிலையங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது.

இந்த ரயில் நிலையத்தின் பாரம்பரியத்தை காக்கும் அதேவேளையில் பயணிகள் வசதிகள் மேம்படுத்தப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் நவீனமயமாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

# மஹிந்த ராஜபக்சவை துருவுகின்றது சி.ஐ.டி.

கொழும்பு, செப்.15



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் செயலாளராகப் பணியாற்றிய லலித் வீரதுங்கவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலம்பதிவுசெய்யவுள்ளது. மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் விளையாட்டுத்துறை அமைச்சுக்காக வரி இல்லாத அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட பேருந்தொன்று, கார்ல்டன் பாலர் பாடசாலைக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# அரசியற் தலைவர்கள் பாதுகாக்கப்படவேண்டும்

## வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, செப்.15

எமது நாட்டின் அரசியலமைப்பிற்கமைய ஜனாதிபதியின் பதவிக் காலத்துக்குப் பிறகு அவர்களின் வாழ்வு பாதுகாக்கப்பட வேண்டும். ஏனெனில் அவர்கள் நாட்டுக்காக முக்கியமான முடிவுகளை எடுத்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச யுத்தத்தை நிறைவு செய்வதற்கு இறுதியாகத் தலைமைவகித்த அரச தலைவர் என்ற ரீதியில் உலகின் சில நாடுகளுக்குச் சென்று அவரால் தனித்து நாடு திரும்பமுடியாது.

இலங்கையில் அரசியல் கலவரம் வெடித்தபோது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்தார். அவரது வீட்டுக்கு தீ வைக்கப்பட்ட போதிலும், அவர் பயந்து ஓடவில்லை. மாறாக ஏனையோரது வீடுகள் எரிக்கப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். எனவே தேசியத் தலைவர்கள் என்ற ரீதியில் அவர்களுக்குக் கௌரவம் வழங்கப்படவேண்டும் - என்றார். (ச-இ)

# பொலிஸாருக்கு கடூழியச்சிறை

கொழும்பு,செப்.15

பொலநறுவையில் 2004ஆம் ஆண்டு ஹோட்டல் முகாமையாளர் ஒருவர் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் தொடர்பாக மூன்று பொலிஸாருக்கு பொலநறுவை மேல் நீதிமன்ற நீதிபதி ஏழு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

ஹோட்டல் முகாமையாளருக்கும் பொலிஸாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு, பொலிஸார் அவரைத் தாக்கியதில் முகாமையாளர் உயிரிழந்தார். சாட்சிகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் அவர்கள் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டு, ஏழு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ச-இ)

# சோதனைக்குட்படும் தொலைதூர பஸ்கள்!

கொழும்பு, செப்.15

தொலைதூரம் பயணிக்கும் பஸ்கள் அனைத்தும் இயக்கத் தொடங்குவதற்கு முன்பு அடிப்படைத் தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதைக் கட்டாயமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் சுற்றறிக்கைமூலம் இதற்குத் தேவையான வழிமுறைகளை வெளியிட நடவடிக்கை எடுத்துவருகிறது.

அதன்படி, அடுத்த மாத ஆரம்பத்திலிருந்து இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 100 கிலோமீற்றருக்கு மேல் பயணிக்கும் பஸ்கள் அவற்றின் இயக்கம் தொடங்குவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பு தகுதிச் சான்றிதழ் பெறவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தலை காலதாமதமின்றி நடத்துக

## பவ்ரல் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு,செப்.15

**நீண்டகாலமாகத் தாமதமாகிவரும் மாகாணசபைத் தேர்தல்களை உடனடியாக நடத்த நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கமான பவ்ரல் வலியுறுத்தியுள்ளது.**

பவ்ரல் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி, இதுதொடர்பில் பொது நிர்வாகம், உள்துறை, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபயரத்னவுக்கு கடிதமொன்றை அனுப்பி இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தொடர்ச்சியான தாமதம் ஜனநாயக உரிமைகளைக் குறைமதிப்புக்கு உட்படுத்தியுள்ளது. மாகாணசபை முறையை அதிகாரத்துவ நிர்வாகத்தின் கீழ் விட்டுவிடுவதற்குப் பதிலாக, பிரதிநிதித்துவ ஜனநாயகக் கட்டமைப்பாக மீட்டெடுக்க வேண்டும். அரசியலமைப்பின் 3ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளபடி, வாக்களிக்கும் உரிமை மக்களின் இறையாண்மை அதிகாரத்தின் ஒரு பகுதியாகும். மேலும் நீண்டகால தாமதங்கள் ஜனநாயக செயல்முறைகளில் பொதுமக்களின் நம்பிக்கையைப் பலவீனப்படுத்தியுள்ளன. எனவே இந்த விடயத்தை ஒத்திவைக்காமல் நிறைவேற்றுவதை உறுதிசெய்ய வேண்டும் - என்றார். (ச-இ)

## தங்க பிஸ்கட்டுடன் ஊழியர் கைது

கொழும்பு,செப்.15

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய ஊழியர் ஒருவர் தங்க பிஸ்கட்டுகளைக் கடத்த முயன்ற குற்றத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அவரது காலுறையினுள் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் சுமார் 210 மில்லியனுக்கும் அதிக பெறுமதியான 5.94 கிலோகிராம் எடையுள்ள 24 கரட் தங்க பிஸ்கட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## கட்டுநாயக்கவில் 8 கிலோ கஞ்சாவை கடத்தியவர் கைது!

கொழும்பு, செப்.15

இலங்கை கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் 8.542 கிலோகிராம் கஞ்சா கடத்த முயன்ற இந்தியப் பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன் மதிப்பு 85 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர் இலங்கை எயார் லைன்ஸ் விமானம்மூலம் இலங்கை வந்தடைந்து இந்தியாவின் மதுரைக்குத் திரும்பும் விமானத்தில் ஏற முயன்றபோது கைதுசெய்யப்பட்டார். அவர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-இ)

## யாழ். போதனாவின் குழந்தை மருத்துவ விடுதி புதிய இடத்தில் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.15

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குழந்தை மருத்துவ விடுதி கடந்த இரு தினங்களுக்கு முன்னர் புதிய இடத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

39 ஆம் இலக்க குழந்தை மருத்துவ விடுதி கடந்த ஐந்து வருடங்களாகத் தற்காலிகமாக இலக்கம் 5 மற்றும் இலக்கம் 12 பிரிவுகளில் இயங்கிவந்தது. இந்தநிலையில் தற்போது புனரமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியில் குழந்தை மருத்துவவிடுதி இயங்க ஆரம்பித்துள்ளது. (ச-66)



## பஸ்களில் அலங்காரங்கள் பொருத்துவதற்குத் தடை!

கொழும்பு, செப்.15

பயணிகள் பஸ்களில் அலங்காரப் பொருள்களைப் பொருத்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் திகதியன்று பயணிகள் பஸ்களில் அலங்காரப்பொருள்களைப் பொருத்துவதற்கு அனுமதித்து, சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

ஆனால் குறித்த சுற்றறிக்கை 2025ஆம் ஆண்டு செப்ரெம்பர் 9ஆம் திகதியுடன் இரத்துச்செய்யப்பட்டுள்ளது. (ச-இ)






## காலுக்குச் சப்பாத்தா? சப்பாத்துக்கு காலா?

காலுக்கு அளவாச் சப்பாத்தை எடுக்கிறதை விட்டிட்டு, சப்பாத்துக்கு அளவா காலை வெட்டுற வேலையைத் தான் நாங்கள் நெடுகலும் பார்த்துக்கொண்டிருக்கிறம். அதிலையும் பள்ளிக்கூடங்களில இப்பிடி எழுந்தமானமா எடுக்கிற முடிவுகள் தேவையில்லாத பிரச்சினையளைக் கொண்டந்திடும். அப்பிடி வேலிக்கபோன ஓணானை வேட்டிக்குள்ள இழுத்துவிட்டிருக்குது வடமராட்சியில இருக்கிற ஒரு தேசியப்பள்ளிக்கூடம். ஒப்பிரேசன் லிபரேசன் சண்டையில மையமா இருந்தப் பள்ளிக்கூடத்துக்கு எங்கட இனத்தின்ர வரலாற்றிலேயே முக்கியமான இடம் இருக்கு. அப்பிடிப்பட்ட பள்ளிக்கூடத்திலதான் இப்பிடி ஒரு சம்பவம் நடந்திருக்கு. சம்பவம் , சம்பவம் எண்டுகொண்டு அது என்ன சம்பவம் எண்டு சொல்லாம விடேலாதுதானே. இதுதான் அந்தச் சம்பவம்.

அந்தப் பள்ளிக்கூடத்தில ஆறாம் ஆண்டு படிக்கிற பிள்ளையளுக்கு அந்த வகுப்பு ரீச்சர் ஒரு ஓர்டர் போட்டிருக்கிறா. அது என்னெண்டால், "அந்த வகுப்புப் பிள்ளையள் மச்சச் சாப்பாடு கொண்டுவரக்கூடாது. எல்லாப் பிள்ளையளும் மரக்கறிச் சாப்பாடுதான் கொண்டு வரோணும்" . இதுதான் அந்த ஓர்டர். ஆனால் அந்தப் பள்ளிக்கூடம் ஒண்டும் சைவப்பள்ளிக்கூடம் இல்லை. எல்லா மதப்பிள்ளையளும் படிக்கிற கலவன் பள்ளிக்கூடம் தான். அப்பிடிப்பட்ட பள்ளிக்கூடத்தில மச்சச்சாப்பாடு கொண்டுவரக்கூடாது எண்டு அந்த வகுப்பு ரீச்சர் திடீரெண்டு ஓர்டர் போடுறதுக்கும் ஒரு காரணம் இருக்குது. அந்த வகுப்பில ஒரு ஐயர்ப்பிள்ளையும் படிக்குதாம். அந்தப் பிள்ளைக்கு, மற்றப்பிள்ளையள் மச்சச்சாப்பாடு கொண்டந்து சாப்பிடேக்க அருவெருக்குதாம். அதுக்காகத்தான் முப்பது பிள்ளையள் இருக்கிற அந்த வகுப்பில ஒரேயொரு பிள்ளைக்காக இப்பிடி ஒரு ஓர்டரைப் போட்டிருக்கிறா அந்த ரீச்சர். அதுக்குப் பிறகு ஆரும் மச்சச்சாப்பாட்டை கொண்டுவந்தால் கடுமையான பனிஷ்மெண்டாம். ஆறாம் ஆண்டெண்டால் சின்னப்பிள்ளையள்தானே. அதுகளுக்கும் மச்சச்சாப்பாடுதானே கூடுதலாப் பிடிக்கும். அதால சில பிள்ளையள் அடிச்சாலும், முட்டுக்காலில விட்டாலும் பரவாயில்லை எண்டு களவா மச்சச்சாப்பாட்டைக் கொண்டுபோயிருக்கினம். அப்பிடி மச்சச்சாப்பாட்டைக் கொண்டந்த ஆறேழு பிள்ளையளை வகுப்புக்கு வெளியில போகச் சொல்லி ரீச்சர் துரத்தி விட்டிருக்கிறா. அதுக்குப் பிறகுதான் பள்ளிக்கூடப் பிரின்சிப்பலுக்கே இப்பிடி ஒரு கட்டுப்பாட்டை ரீச்சர் போட்டிருக்கிறா எண்டு தெரிய வந்திருக்குது. பிரின்சிப்பலும் இப்பிடிக் கட்டுப்பாடு தேவையில்லை எண்டு சொல்லியும் அந்த ரீச்சர் கேக்கிறா இல்லையாம். இப்ப அந்த வகுப்புப் பிள்ளையளுக்கு பெற்றோர் மச்சச்சாப்பாடு குடுத்தாலும் பிள்ளையள் " ரீச்சர் அடிப்பா நீங்கள் மரக்கறியைத் தாங்கோ" எண்டு அடம் பிடிக்குதுகள். அதால பாணையும் , இடியப்பத்தையும்தான் சம்பல் சொதியோட குடுத்து விடுகினமாம். வாழும், வளரும் பிள்ளையள் சத்தான சாப்பாடு சாப்பிட்டாத்தானே ஆரோக்கியமா வளரமுடியும், படிக்கவும் ஏலும். ரீச்சர் மச்சச்சாப்பாடு கொண்டுவரக்கூடாது எண்டு சொன்னதுக்குப் பதிலா, மச்சம் சாப்பிடாத பிள்ளையை , இடைவேளைநேரத்தில தனியப்போய் சாப்பிடுறமாதிரி ஒரு இடத்தை ஏற்பாடு பண்ணியிருந்தால் இப்பிடிச் சிக்கல் வந்திருக்காதே. பொறுப்பான அதிகாரிமார் ஒருக்கா இந்த விசயத்தைக் கவனிச்சு நல்லமுடிவு எடுப்பினமோ?

padsi@uthayan.com
-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாலையில் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அலுவலகத்தில் சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். பணிச்சுமை குறையும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாகும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். ஆதாயம் உண்டாகும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.


**மகரம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். உணவு விடயத்தில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் மேம்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** காரியங்கள் வெற்றிகரமாகமுடியும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

# தீவகமும் பழமொழிகளும்

கருணாகரன் நிலானி



இன்றைய காலத்தினர் இதனைப் பாவிப்பதே இல்லை" என நம் முன்னோர் இன்றைய தலைமுறையினரை நோக்கி கூறும் அளவிற்கு வழக்கிழந்து செல்கின்றன பழமொழிகள்.

எம்மிடையே வாய்மொழி மரபாகத் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு மக்களின் வாழ்வியல், நம்பிக்கை, விழுமியங்கள் போன்றவற்றைப் பிரதிபலிப்பவையாக பழமொழிகள் காணப்படுகின்றன. பாரம்பரியத்துக்கும் பண்பாட்டுக்கும் முக்கியத்துவம் வழங்கும் யாழ்ப்பாணத்தில் மண்டைதீவு, நெடுந்தீவு, நயினா தீவு எனப்பல தீவகப் பகுதிகள் உள்ளன. இன்றும் பழமொழிகள் உயிர்கொண்டிருப்பதை தீவகப் பகுதி வாழ் மக்களின் பழமொழிகள் எடுத்துரைப்பின் வாயிலாக அறிய முடிகிறது.

நயினாதீவு வாழ் மக்களிடையே இதுதொடர்பான ஆய்வினை மேற்கொண்டபோது அவர்கள் அங்கு புழக்கத்தில் உள்ள பழமொழிகள் சிலவற்றை நினைவூட்டினர். ஆண்டிகள் மடம் கட்டுவது போல, நாய்க்கு வேலையும் இல்ல நிக்க நேரமும் இல்ல, எள்ளானாலும் ஏழாகப் பிரி, பாத்திரம் அறிந்து பிச்சை போடு, நூலைப் போல சேலை தாயைப்போல பிள்ளை, எட்டடி நட, ஊசி போறதப் பார்த்தாரு உலக்கப் போறத பார்க்கல, கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம், உடையார் செயலில் சடையார் வாணமிட்டார், கந்தையானாலும் கசக்கி கட்டு, காமலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் கலர், நக்குண்டார் நாவிழந்தார், தாரமும் குருவும் நல் விதிப்படியே, பத்தினி சாபம் பாறை அழிக்கும், திரைகடல் ஓடி திரவியம் தேடு, அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என எண்ணிலடங்கா பழமொழிகளை முன் வைத்தனர்.

அவ்வாறே மண்டைதீவைப் பொறுத்தவரையில் பின் வந்த கொம்பு முன் வந்து செவியை மறைக்கிறது, பணம் பந்தியில் குணம் குப்பையில், இளம் கன்று பயமறியாது, அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்தியேதான், ஆடத்தெரியாத ஆட்டக்காரி மேடை சரியில்லை என்றாளாம், கேப்பையிலே நெய் வடிஞ்சாக் கேட்பாருக்கு மதி எங்கே போச்சு, போன்ற பழமொழிகள் இன்றும் அங்குள்ள மூத்தோரிடையே வழக்கத்தில் உள்ளனஎன்பதை அறியமுடிகிறது.

இவ்வாறான வகையில் தீவகப் பகுதி மக்களால் இன்றும் ஓரளவு இயங்கு நிலையில் உள்ள பழமொழிகளின் வாயிலாக ஆணாதிக்கம், பெண் அடிமை நிலை, பெண்களின் தன்மை என்பவற்றை அறிய முடிகிறது. எடுத்துக்காட்டாக, "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே"என்ற பழமொழியின் வாயிலாக பெண்ணால் முடியாத விடயம் எதுவும் இல்லை என்பதை உணர்த்துகிறது. அவ்வாறே "பேய்க்கு வாக்கப்பட்டால் புளிய மரத்தில் ஏறித்தான் ஆகவேண்டும்"என்ற பழமொழி பெண்ணின் பிடிவாத குணத்தைக் காட்டுகிறது. "வழிய வந்த சீதேவியை காலால் உதைத்து தள்ளலாமா"இப் பழமொழி பெண்களின் உயர்வை காட்டுவதாக அமைகின்றது. அவளை உதாசீனப்படுத்துவது முழுக் குடும்பத்தையும் பாதிக்கும் என்பதை குறிக்கின்றது.

இப் பழமொழிகளின் வாயிலாக கூறுபவரின் திறன், அறிவு, அவரின் ஆளுமை மற்றும் பழமொழிகளின் கட்டமைப்பு என்பவற்றை விளங்கிக்கொள்ளமுடிகிறது. மேலும் பழமொழிகளை பொறுத்தவரையில் தீவகங்களில் அவை வாய்மொழி வழியாகவே கடத்தப்பட்டு வருகின்றன. அவற்றிற்கான செல்வாக்கு என்பது ஒப்பிட்ட அளவில் இன்று குறைந்த நிலையில் காணப்படுகிறது.

மேலும் இவற்றின் சுயபடைப்பு என்பது மறைந்து அவை வேறு வார்த்தைகள் வழியாக மருவி நிலைத்து நிற்பதையும் காணமுடிகிறது."பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளிய மரத்தில் ஏறித்தான் ஆகவேண்டும்" என்ற பழமொழியானது இன்று"குதிரைக்கு வாழ்க்கைப்பட்டால் கனச்சித்தான் ஆக வேண்டும்"அல்லது" கழுதைக்கு வாழ்க்கைப்பட்டால் கத்தித் தான் ஆக வேண்டும்"என மருவி வழங்கப்படுகின்றது. நம்மிடமிருந்து அருகிச்செல்லும் பழமொழிகளை மக்கள்மயப்படுத்தி பேணிப் பாதுகாப்பதன் வாயிலாக அவை அடுத்து சந்ததியினரையும் சென்றடைய வழிகோல முடியும்.

# திலீபன் நினைவாக உதிரக்கொடை

யாழ்ப்பாணம், செப்.15

தியாகதீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 'எமக்காக உயிர் கொடுத்தவனுக்காக உதிரம் கொடுப்போம்!' எனும் தொனிப் பொருளில் குருதிக்கொடை முகாம் நிகழ்வு எதிர் வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு அருகில் இடம்பெறவுள்ளது. குருதிக் கொடையாளர்கள் பங்கேற்று உதிரக்கொடையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-66)



கோப்பாய் சக்கர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# மாறாத மனநிலை...!

இலங்கையில் போர்க்குற்றங்கள் என எவையும் இடம்பெறவில்லை என்று அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி அநுரவின் வலதுகையும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான அருண ஜயசேகர. போரின் போது சில விரும்பத்தகாத விடயங்கள் இடம் பெறும். ஆனால், அவற்றையெல்லாம் போர்க் குற்றம் என்ற நிலைப்பாட்டில் அணுகமுடியாது என்பதே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் முன்வைக் கும் வாதமாக அமைந்துள்ளது. ஆக, ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியிலும் தமிழர்களுக்கு நீதி கிடைக்காது என்பது பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவின் கருத்து களில் இருந்து வெளிப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்ளகப் பொறிமுறையூடாக விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப் படுவார்கள் என்று அநுர அரசாங்கம் பலமுறை தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் இவ்வாறான கருத்துகளை அரசாங்கம் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றது. இவ்வாறான பின்னணியில்தான், பிரதி அமைச்சர் அருண ஜயசேகர போர்க்குற்றங்கள் என்று ஒன்றுமில்லை, போரில் விரும்பத்தகாத செயல்களாக அவை இருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார். அருண ஜயசேகர அமைச்சரவை அந்தஸ் துள்ள அமைச்சராக இல்லாதுவிட்டாலும், பாதுகாப்பு அமைச்சில் ஜனாதிபதி அநுரவுக்கு அடுத்த படியான அதிகாரங்களைக் கொண்டிருப்பவர். எனவே, அவரின் கருத்துகள் சாதாரணமானவை யல்ல. இது அரசாங்கத்தினுடைய நிலைப்பாட்டின் வெளிப்பாடு.

அத்துடன், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பல விடயங்களில் சொல்வதொன்றையும் செய்வதொன்றையுமே வெளிப்படுத்திவருகின்றது. நிலையான கருத்துகள் - கொள்கைகள் என்று இல்லாமல், காலத்துக்கேற்ற வகையில் பச்சோந்திகளாக மாறிச் செயற்பட்டுவருகின்றனர் என்பதும் அவதானிப்பு. இதே அநுர அரசாங்கத்தின் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு நீதி வழங்கப்படும். குறிப்பாக, இசைப்பிரியா, பாலச்சந்திரன் ஆகி யோரைக் கொன்றவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார். அப்படியென்றால், இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றன என்று அரசாங்கம் கூறவருகின்றதா? அல்லது போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடா? என்ற பெரியதொரு கேள்வி தற்போது எழுகின்றது.


ஆக, காலத்துக்கு ஏற்ப கருத்துகளை வெளிப்படுத்தும் கடந்த கால சாபக்கேடான ஆட்சியின் 'நுட்பமான தொடர்ச்சியாகவே' தற்போதைய அரசாங்கமும் அமைந்துள்ளது. ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் சில சிறந்த திட்டங்களை முன்னெடுக்கின்றது என்பதையோ, நாட்டில் ஊழல் அற்ற ஆட்சிக்கான அடித்தளத்தை அமைத்துவருகின்றது என்பதையோ மறுப்பதற்கில்லை. ஆனால், 'நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பொசிவதைப்போன்ற' பயன்களைத்தான் தமிழர்கள் அனுபவிக்கமுடியுமேதவிர, தமிழர்க ளின் நலன்களை மையப்படுத்திய தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய ஆட்சியாக ஒருபோதும் அமையப்போவதில்லை. அதற்கு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும், ஊடக சந்திப்பில் பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவும் வெளிப்படுத்திய கருத்துகள் ஆகச் சிறந்த உதாரணங்கள்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

வாழ்க்கையில் நாம் முன்னேற முன்னேறத்தான் நம் திறமைகளின் வரம்புகளைத் தெரிந்து கொள்கிறோம்.

—நியேட்சே—



முதல் காலாண்டில்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூ.18 பில்லியன் ஈட்டல்

**கொழும்பு, செப்.15**
**2025ஆம் ஆண்டின் முதல் பாதியில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 18 பில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த இலாபம் பெற்றோலியத் துறையை மேலும் மேம்படுத்துவதற்கான பல திட்டங்களைத் தொடங்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்று முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமார குறிப்பிட்டார்.
எரிபொருள் விநியோகத்தை மேம்படுத்தவும், விமானச் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கவும், முத்துராஜவெல முனையத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் வரை விமான எரிபொருள் குழாய் அமைக்கும் திட்டங்களை முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (ச-இ)

## மழைக்கு வாய்ப்பு

கொழும்பு,செப்.15
மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல்திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## போலியான ஆவணங்களுடன் 25 வாகனங்கள்

கொழும்பு,செப்.15
சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 25 வாகனங்கள் தொடர்பில், குற்றப்புலனாய்வுப்பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இதுதொடர்பான சந்தேகநபர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
சட்டவிரோதமாக பதிவு செய்தல் மற்றும் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி வாகனங்களை ஒன்றுசேர்த்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் கீழ், சந்தேகநபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். விசாரணைகளின்போது பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

## கெஹலியவின் மகன் மீது குற்றப்பத்திரிகை

கொழும்பு, செப்.15
முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகன் ரமித் ரம்புகவெலவுக்கு எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கடந்த வெள்ளிக்கிழமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
270 மில்லியன் ரூபாவுக்கு அதிக பெறுமதியான சொத்துகளை சட்டவிரோதமாகச் சம்பாதித்த குற்றச்சாட்டின் பேரில் ஊழல் எதிர்ப்புச்சட்டத்தின்கீழ் ரமித் ரம்புக்வெலவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

## 2026ஆம் ஆண்டின் பரீட்சை அட்டவணை




2026ஆம் ஆண்டுக்கான பரீட்சை அட்டவணையை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. அதன்படி, 2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தர சாதாரண தரப் பரீட்சை, 2026ஆம் ஆண்டு பெப்ரவரி 17ஆம் திகதி முதல் பெப்ரவரி 26ஆம் திகதி வரை நடைபெறும். 2026ஆம் ஆண்டுக்கான உயர்தரப்பரீட்சை, அடுத்த ஆண்டு ஓகஸ்ட் 10ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 5ஆம் திகதிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, 2026ஆம் ஆண்டு ஓகஸ்ட் 9ஆம் திகதி அன்று நடைபெறும். அத்துடன், பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை, 2026ஆம் ஆண்டு ஒக்டோபர் 24ஆம் திகதி இடம்பெறும். 2026 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சை, அடுத்த ஆண்டு டிசெம்பர் 8ஆம் திகதி முதல் டிசெம்பர் 17 ஆம் திகதி வரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை** செவ்வாய்க்கிழமை- ஆவணி 31
16.09.2025
சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 03.03 - 04.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர்ப் பிரதேசசபை எல்லைக்குள்

# வெள்ளநீரோட்டத்தடைகள் அகற்றுவதற்குக் காலக்கெடு!

யாழ்ப்பாணம்,செப்.15

**நல்லூர்ப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், வெள்ள நீரோட்டத்துக்கான தடைகளை 14 நாள்களுக்குள் அகற்றுமாறு, நல்லூர்ப் பிரதேசசபை பொது மக்களிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.**

எதிர்வரும் மாதங்களில் மழைக்காலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில், சீரான வெள்ள நீரோட்டத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு, நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட வடிகால்கால்கள் தூர்வாரப்பட்டு, தூய்மைப்படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வடிகால்களைத் தூர்வாருவதற்கு இடையூறாக, வடிகால்களுக்கு மேல் கட்டப்பட்டுள்ள கட்டுமானங்களையும், வீதிகளில் போக்குவரத்து மற்றும் வெள்ள நீராட்டத்துக்கு இடையூறாக காணப்படுகின்ற நிலக்கற்கள், கட்டுமாணங்கள், பூச்செடிகள் என்பவற்றையும் இன்றிலிருந்து பதினான்கு நாள்களுக்குள் அகற்றுமாறு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. குடியிருப்பாளர்கள் தடைகளை அகற்றாவிடின், அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் எவ்வித முன் அறிவித்தலுமின்றி, பிரதேசசபை அவற்றை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தவிசாளர் பத்மநாதன் மயூரன் அறிவித்துள்ளார். (க-66)

# யூபிலி விழா

மன்னார், செப்.15

இயேசுக்கிறிஸ்துவின் மனித அவதாரத்தின் 2025ஆம் ஆண்டின் மன்னார் பொதுநிலை குடும்ப ஆணைக்குழுவின் யூபிலி விழா எதிர்வரும் ஒக்ரோபர் 6ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3மணிக்கு மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. மன்னார் மாவட்ட பொது நிலைகுடும்ப ஆணைக்குழுவின் பணிப்பாளர் அருட்பணி இ. அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளாரின் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை, கௌரவ விருந்தினராக மன்னார் மறை மாவட்ட ஓய்வுநிலை ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்பணி பா.கிறிஸ்து நேசரட்ணம் அடிகளார், மன்னார் மறைக் கோட்ட முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்துநாயகம் அடிகளார், யாழ்.மறைமாவட்ட அகவொளி இயக்குநர் அருட்பணி ம.டேவிட் அடிகளார், மன்னார் மறைமாவட்டத் துறவிகள் அமைப்புத் தலைவர் அருட்பணி வை.வில்லியம் கொஸ்தா (எஸ்.டி.பி) அடிகளார், தோட்டவெளிப் பங்குத் தந்தை அருட்பணி எ.இ.வோர்ச்கரன் அடிகளார் மற்றும் மன்னார் மறைமாவட்டபொதுநிலைஆணைக் குழுத்தலைவர் அ.பிலிப்புப்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-60)

தேசியமட்டக் கோலூன்றிப்பாய்தல்

# யாழ்ப்பாணக் கல்லூரி மாணவிகள் வென்றனர் தங்கம், வெள்ளி

யாழ்ப்பாணம், செப்.15

93 ஆவது தேசியமட்ட சிரேஷ்ட சேர் ஜோன் ராபட் தடகளப் போட்டிகளில் யாழ்ப்பாணக்கல்லூரி மாணவிகள் முதல் இரு இடங்களைப் பெற்று தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களைத் தமதாக்கிக் கொண்டனர்.

18 வயது பெண்கள் பிரிவு கோலூன்றிப்பாய்தலில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி ஜெ. ரூபிகா 2.70 மீற்றர் உயரம் பாய்ந்து முதலாவது இடத்தையும் கு.வைஷ்ணவி அதே பிரிவில் 2.70 மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாம் இடத்தையும் பெற்றுப் பதக்கங்களை சுவீகரித்தனர். இந்தப் போட்டி கடந்த 8ஆம் திகதி கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் இடம்பெற்றது. (ச)

# சென்.ஜோன்ஸ் கல்லூரி தேசியத்தில் பதக்கங்கள்!



யாழ்ப்பாணம், செப்.15

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பளு தூக்கல் போட்டியில் புனித பரியோவான் கல்லூரி தங்கப்பதக்கத்தைத் தனதாக்கியுள்ளது.

பத்து ஆண்டுகளின் பின்னர் கடந்த ஆண்டு பளுதூக்கல் போட்டியில் தங்கப் பதக்கம் சுவீகரிக்கப்பட்டதுடன் இந்த ஆண்டும் தங்கப்பதக்கத்தை வென்று தொடர் வெற்றியை பரியோவான் கல்லூரி பதிவு செய்துள்ளது. 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ச. வினோஜ் தங்கப்பதக்கத்தை வென்று கல்லூரிக்குப் பெருமைசேர்த்துள்ளார். (ச-இ)

# முகமாலை ஆரோக்கியமாதா கொடியேற்றம்

யாழ்ப்பாணம், செப்.15

கத்தோலிக்க மக்களின் புனித யாத்திரைத் தலங்களில் ஒன்றான முகமாலை ஆரோக்கியமாதா ஆலய வருடாந்த நவநாள் திருநாள் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. மறுநாள் சனிக்கிழமை மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலிப் பூஜையும் இடம்பெற்று எதிர்வரும் 21ஆம் திகதி காலை திருநாள்பாடற் பலிபூஜையும் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். (ச-9)

யாழ்.கூட்டுறவுச்சங்க

# கிளை முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தால் கிளை முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.விண்ணப்பதாரி கா.பொ.த சாதாரண தரத்தில் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியிலுள்ள தலைமை அலுவலகத்தில் தொடர்புகொண்டு விண்ணப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன் சமர்பிக்கவேண்டும். மேலதிகத் தகவல்களுக்கு 0212222587 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (ச-25)

# இராணுவத்தினரால் கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், செப். 15

523ஆவது படைப்பிரிவின் ஒருங்கிணைப்பில் யாழ். மாவட்டக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ரசிக்க குமார தலைமையில் பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு தென்மராட்சிக் கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ரீ.டி.எம்.இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர் தேமிய அன்ரனி த மெல்லின் நிதி ஒதுக்கீட்டில் 5 மில்லியன் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம் மற்றும் விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு அவை வழங்கப்பட்டன. (ச-25.159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உயிர்மாய்ப்புக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி


மன்னார்,செப்.15
சர்வதேச உயிர்மாய்ப்புத் தினத்தை முன்னிட்டு, மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையின் உளநல அணியினரால், விழிப்புணர்வு நடைபவனி அண்மையில் நடத்தப்பட்டது. மாவட்டப் பொது மருத்துவமனைப் பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர்,சுகாதார ஊழியர்கள் உட்பட இளைஞர்கள் நடைபவனியில் பங்கேற்றனர்.
மன்னார் பொதுமருத்துவமனையில் இருந்து மன்னார் நகரப்பகுதிகளுக்கு விழிப்புணர்வுப் பதாதைகளை ஏந்திய வாறு நடைபவனியாகச் சென்றனர். நடைபவனியைத் தொடர்ந்து மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையில் அமைக்கப்பட்ட (ஜெவன பியசு) இளைஞர் ஜெவன சுகாதார நிலையம் திறக்கப்பட்டது.
இந்த நிலையத்தின் ஊடாக, மாவட்ட ரீதியாக உயிர்மாய்ப்பு எண்ணிக்கையைக் குறைத்தல், உயிர்மாய்ப்பு முயற்சியாளர்களைக் கண்காணித்தல் உட்பட பல்வேறு உளநல கண்காணிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-213)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.15
சித்தங்கேணி மாதர்க் கிராம அபிவிருத்திச் சங்கமும் முகாமைத்துவக் குழுவும் இணைந்து நடத்திய பாலர் பாடசாலையின் 60ஆவது ஆண்டு வைர விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சித்தங்கேணிப் பிள்ளையார் ஆலயப் பின் வீதியில் நடைபெற்றது. இதன்போது சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள், பரிசில்கள் வழங்கல் போன்றன இடம்பெற்றன. (ச-41-27)




ஈழத்துச் சித்தர் நல்லூர்த் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் சைவப்பிரகாசப் பேரவையின் செயலாளர் வேலுப்பிள்ளை சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது. (ச-66)



கல்வியமைச்சின் சுற்றாடல் சார் செயற்பாட்டுக்காக ஜனாதிபதி விருது பெற்ற நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி விஞ்ஞான ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி சிவகுமாரன் வடமத்திய மாகாண சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளரினால் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அண்மையில் கௌரவிக்கப்பட்டார். (ச-41-17)




## போதைப்பொருள் விழிப்புணர்வு

மன்னார், செப்.15
மன்னார் உயிலங்குளம் 542ஆவது காலாட்படைப் பிரிவின் ஏற்பாட்டில், பாடசாலை மாணவர்களுக்கான போதைப் பொருள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு முருங்கன் மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின்கீழ் புனர்வாழ்வுப் பணியகம் மற்றும் தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச்சபையின் உதவியுடன் கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டது. வளவாளராக தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச்சபையின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜந்தா சாமிலி வயலட் கலந்துகொண்டார். (ச-25,60)

## துப்புரவுப்பணி

யாழ்ப்பாணம், செப்.15
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் வன வளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வேலணை மண்டைதீவுப் பகுதியில் உள்ள கண்டற் தாவரங்கள் சூழ்ந்துள்ள நிலப்பரப்புகள் தூய்மை செய்யப்பட்டன. யாழ். - கிளிநொச்சி மாவட்ட வனவளத்திணைக்களத்தின் அதிகாரி டி.கே.டி வத்தேகம தலைமையில் முன்னெடுக்கப்பட்ட திட்டத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வேலணைப் பிரதேசசபை, வேலணைப் பிரதேச செயலகம், கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் ஆகியன இணைந்து கொண்டன. (ச-25.27)







# ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை விசாரணை அறிக்கை விநியோகம்

மன்னார், செப்.13
படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் மரணம் தொடர்பான விசாரணை அறிக்கைகள் மன்னார் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் மன்னார் ஊடகவியலாளர்களால் கடந்த வியாழக்கிழமை விநியோகிக்கப்பட்டன.
மன்னாரில் காற்றாலைத் திட்டத்துக்கு எதிராக 40ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டுவருகின்ற மக்கள் போராட்டத் தளத்தில் வைத்து அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன. குறித்த அறிக்கையில் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை வழக்கின் விசாரணை அறிக்கை மற்றும் கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25.56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
09
.
08
.
1939



மறைவு
13
.
09
.
2025

சித்தன்கேணியை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

## திரு. ஆறுமுகம் கமலநாதன்

அவர்கள் 13.09.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம். செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா சீதாதேவியின் மருமகனும், நாகேஸ்வரியின் (பொன்மணி) அன்புக் கணவரும் குமரண், நிரஞ்ஜலா (சாயினி), ரமணன் ஆகியோரின் அன்புத்தந்தையும், தனபாலன், ரேவதி, ஹம்சலா ஆகியோரின் அருமை மாமனாரும், லேயானா லேயோவின் தாத்தாவும் அபரா அனாகாவின் அருமை அப்பப்பாவும், காலஞ்சென்றவர்களான இராசநாயகி, சிறி பத்மநாதன், செல்லநாதன் மற்றும் நளினியின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15.09.2025 திங்கட்கிழமை முற்பகல் 9:00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினரகள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 460591) E

பிள்ளையார் கோயிலடி
சித்தன்கேணி


தகவல்:
குடும்பத்தினர்
077 333 9752

## இலங்கைக்கு...

இராமநாதபுரம் வேதாளை மீனவர் கிராமத்தில், வீடொன்றில் மஞ்சள் மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்று கிடைத்த தகவல் அடிப்படையில், மரைன் பொலிஸார் நேற்றுத் திடீர் சோதனை நடத்தினர். பூட்டியிருந்த வீடொன்றில், சமையல் மஞ்சள் வாசனை அதிகளவு வந்ததால் வீட்டை உடைத்து சோதனை செய்தபோது, 40 மூடைகளில் ஆயிரத்து 600 கிலோ எடையுள்ள மஞ்சள் மீட்கப்பட்டது. (அ,எ-க-56)

# மரண அறிவித்தல்

தோற்றம்
07
.
09
.
1953



மறைவு
13
.
09
.
2025

## வல்லிபுரம் மகாலிங்கம்

"தில்லைவாசா" பலாலி தெற்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் "வைகுந்தம்" கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மகாலிங்கம் (முன்னாள் வடபிராந்திய முகாமையாளர் தென்னைப் பயிர்ச்செய்கை சபை - தலைவர், வயாவிளான் மானம்பராய் ஆலய பரிபாலனசபை, கண்ணகையம்மன் ஆலய பொருளாளர், செயலதிபர் - வயாவிளான் மீள் எழுச்சிக்கான உதவும் கரங்கள் மற்றும் ஆலோசகர், வயவிளான் பூனையன்காடு இந்து மயான அபிவிருத்திச்சபை) அவர்கள் 13.09.2025 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், வல்லிபுரம் - அன்னலட்சுமி தம்பதிகளின் மருமகனும், ஜெயலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், திருவரங்கன் (பொறியியலாளர் - லண்டன்), பிரார்த்தனா (ஆசிரியை - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), கீர்த்தனா (உதவிப் பணிப்பாளர் - விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி) ஆகியோரது அன்புத் தந்தையும், குந்தவி (லண்டன்), உமாகஜன் (I.C.T அலுவலர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்ஷன், லதுஷன், ஸான்வி, துவாரனி ஆகியோரின் பாசமிகு பேரனும், திருமதி சிவபாக்கியம், திருமதி சற்குணம், பத்மநாதன் (ஓய்வுநிலை மேலதிக மாவட்ட பதிவாளர் - நியூசிலாந்து), சத்தியசீலன் (ஓய்வு நிலை திட்டமிடல் பணிப்பாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, தர்மலிங்கம் மற்றும் திருமதி ஜெகதீஸ்வரி, திருமதி ரேவதிதேவி, விவேகானந்தன் (கனடா), விஜயலட்சுமி (கனடா), ஞானலட்சுமி, மகாலட்சுமி (கனடா), விபுலானந்தன் (கனடா), சர்வலட்சுமி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2025) திங்கட்கிழமை மாலை 03.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பலாலி தெற்கு வயாவிளான் பூனையன்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'வைகுந்தம்'
கலாசாலை வீதி, திருநெல்வேலி

(CS 59411) E

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம்
06
.
10
.
1948

மறைவு
12
.
09
.
2025

## வேலாயுதப்பிள்ளை மங்கையற்கரசி

### (இரத்தினம்)

மீசாலையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதப்பிள்ளை மங்கையற்கரசி அவர்கள் கடந்த (12.09.2025) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானைபிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான வோலாயுதப்பிள்ளை (ஓய்வு பெற்ற கிராமசேவகர்) அவர்களின் அன்பு மனைவியும், தவரூபி (கனடா), தயாளன் (ஆசிரியர் மண்டைதீவு மகவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு தாயாரும், பகீரதன் (கனடா), வாசுகி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், (அமரர்) மயில்வாகனம், குலேஸ்வரி (அமரர்), சுவாமிநாதன், மிருகண்டர் (அமரர்), தங்கேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை), கேதாரேஸ்வரி (இளைப்பாறிய பரிசாரகர்), கமலேஸ்வரி, ஜெகதீஸ்வரி (அமரர்) ஆகியோரின் சகோதரியும், கெங்காதேவி, மகேஸ்வரி, குலராசசிங்கம், சந்திரராசா, சற்குணரத்தினம் (அமரர்) ஆகியோரின் மைத்துனியும், பிரவீனா (கனடா), கஸ்தூரி (கனடா), பூர்விகன், தகீசன், தபீசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.09.2025) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 668 1966
076 848 4010

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
26
.
06
.
1938



மறைவு
12
.
09
.
2025

## சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம்

**(ஸ்வர்ணாம்பிகை அம்பலவாணேஸ்வர் ஆலய முன்னாள் பரிபாலனசபைத் தலைவர், உரிமையாளர் ஹப்பி எலக்ரிக்கல்ஸ் - சுன்னாகம்)**

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் 12.09.2025 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லாச்சிப்பிள்ளை தம்பதியினரின் ஏக புதல்வரும் காலஞ்சென்ற இரத்தினம், சற்குணவதி, சரணவணமுத்து, பத்மாவதி ஆகியோரின் சகோதரரும், நாகபூசணி அவர்களின் அன்புக் கணவரும், உமாதர்சனி, பாலமுரளிதரன், முரளி மனோகரன், திருமால், திருச்செந்தூரன், முராரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செ.மகாலிங்கம், பிரபா, ஞானஸ் கந்தவதனி, அனித்தா, பிரமிளா, துவாரகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விஜயாலயன், நந்திதா, விஷ்ணுசரண், விமலாதித்தன், லக்சனா, சாதனா, மயூரன், கனிஷ்டிகன், கஜானன், ஜஸ்மிளா, சம்யுதா, மகஸ்வின், ஆருத்திரா இஷா, ஆகியோரின் பேரனும் ஜமிகனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரில்லத்தில் வைக்கப்பட்டு நாளை (16.09.2025) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 390 7042, 077 401 8598

(CS 460550) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு முட்டுக்கட்டைபோடுகிறது அரசு!

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

**கொழும்பு, செப்.15**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விசாரணைகளை வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுப்பதற்கு அரசாங்கமே தடையை ஏற்படுத்தியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர பதவியிலிருக்கும் போது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விசாரணைகளை நியாயமாக முன்னெடுக்க முடியுமா? என்ற சந்தேகம் உள்ளது. ஏப்ரல் 21 விசாரணைகளின்போது அருண ஜயசேகரவும், அவருக்குக்கீழ் பணியாற்றிய அதிகாரிகளும் சாட்சியமளித்திருக்கின்றனர். இந்த விசாரணைகளை முறையாக முன்னெடுத்துச்செல்வதற்கு இடமளிக்கவேண்டும் என அவர் நினைத்தால், நிச்சயம் பதவி விலகியிருப்பார். அருண ஜயசேகர அதைச் செய்யாததன் காரணமாகவே எதிர்க்கட்சிகள் அவருக்கெதிராக அவநம்பிக்கைப் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-25-இ)



ஒட்டுசுட்டானில்

## இறந்த நிலையில் யானை மீட்பு

கொழும்பு, செப்.15

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சம்மளங்குளம் பகுதியில் யானைக் குட்டியொன்று இறந்தநிலையில் நேற்று மீட்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு ஒட்டுசுட்டான் வனவிலங்கு அதிகாரிகள் சென்று யானையின் சடலத்தை ஆய்வு செய்தனர். பின்னர் உயிரிழந்த யானையைப் புதைக்கும் நடவடிக்கை வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் முன்னெடுக்கப்பட்டது. (ச-19)

## மின்னல் தாக்கியதில் 52 வாழைகள் அழிவு

யாழ்ப்பாணம்,செப்.15

நவகிரிப் பகுதியில் தோட்டமொன்றில் மின்னல் தாக்கம் ஏற்பட்டு 52 வாழைகள் அழிவடைந்துள்ளன. கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. அந்தப் பகுதியில் மின்னல் தாக்கியதில் தாளையா புவனேஸ்வரன் என்பவரின் தோட்டத்தில் இருந்த மோட்டர் அறை, மோட்டர், மின்சார இணைப்பு என்பன முற்றாகச் சேதமடைந்துள்ளன. அத்துடன் தோட்டத்திலிருந்த 52 வாழை மரங்களும் அழிவடைந்துள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார். (க-27)





## கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் தனியார் வாகனங்களுக்குத் தடை

கிளிநொச்சி,செப்.15

கிளிநொச்சி மத்திய பேருந்துநிலையத்துக்குள், தனியார் வாகனங்கள் நுழைவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில், கிளிநொச்சி மாவட்ட உதவிப்பொலிஸ் அத்தியட்சகர், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கரைச்சிப் பிரதேச சபையின் உப தவிசாளர் மற்றும் செயலாளர், பேருந்துநிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்டோர் நேரடியாகச் சென்று அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி, இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர். பேருந்துநிலைய வளாகத்தினுள் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்கள், விபத்துகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கருத்திற்கொண்டு இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக நோயாளர்கள் மற்றும் இயலாதவர்களின் நிலைமைகள் கருதி, பேருந்துநிலையத்தின் முன்பகுதி வரை, தனியார் வாகனங்கள் பயணிப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படும். இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அறிக்கை, கிளிநொச்சி மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகரிடம் கையளிக்கப்படவுள்ளது. (க-113, 40)

## அருட்தந்தை பெனடிக்ட் நித்திய இளைப்பாறல்

கொழும்பு, செப்.15

இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் முன்னாள் தொடர்பாடல் பணிப்பாளர் அருட்தந்தை பெனடிக்ட் ஜோசப் பெர்னாண்டோ நித்திய இளைப்பாறினார். தேசிய கத்தோலிக்கத் தொடர்பாடல் பணிப் பாளர் இதனை அறிவித்துள்ளார். (ச-இ)

## உள்ளூராட்சி வாரத்தில் காரைநகரில் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப்.15

காரைநகர்ப் பிரதேசசபையினுடைய உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சபையினால் திறந்த சைக்கிள் ஓட்டப் போட்டி (ஆண்கள்), திறந்த மரதன் ஓட்டப்போட்டி (ஆண்கள், பெண்கள்) என்பன நடாத்தப்படவுள்ளன. அத்துடன் காரைநகர் சனசமூக நிலையங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சனசமூக நிலையங்களுக்கிடை யிலான சாக்கோட்டம், சமநிலையோட்டம், கயிறு இழுத்தல் போன்றவையும் இடம்பெறவுள்ளன. மேலும் நாளை திங்கட்கிழமை இரத்ததான நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மேலதிகத் தொடர்புகளுக்கு 021 225 1735 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு காரைநகர்ப் பிரதேசசபைத் தவிசாளர் அறிவித்துள்ளார். (ச-41)

## முக்கொம்பன் பொதுச்சந்தை மக்கள் பாவனைக்காகத் திறப்பு



கிளிநொச்சி, செப்.15

பூநகரி முட்கொம்பன் பிரதேச மக்களது நலன்கருதி கட்டிமுடிக்கப்பட்ட முட்கொம்பன் பொதுச்சந்தை கடந்த புதன்கிழமை உத்தியோகபூர்வமாக மக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்துவைக்கப்பட்டது.

பூநகரிப் பிரதேச சபைத் தவிசாளர் சிறீரஞ்சன் மற்றும் துணைத்தவிசாளர் தலைமையில் சந்தை திறந்துவைக் கப்பட்டது. (ச-25)

## மாகாணசபைகளில் 61,835 வெற்றிடங்கள்

இலங்கையின் மாகாணசபைகளில் பல்வேறு பதவிகளுக்கான 61 ஆயிரத்து 835 வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்படாமல் உள்ளதாகப் பொதுநிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார். அவற்றில் அதிகபட்சமாக 16 ஆயிரத்து 651 வெற்றிடங்கள் மேல் மாகாணசபையில் நிலவுகிறன. நாடு தழுவிய சேவைகளுக்கு ஆயிரம் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் ஏற்கனவே ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 1,000 பேரை பணியமர்த்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி வாரியம் பதி ஸ்ரீவெங்கடா சல பதி பெருந் திருவிழா வின் தேர் உற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றது. (ச-25.9)

15.09.2025 திங்கட்கிழமை

## முன்னாள் ஜனாதிபதிகளின்

# அதிகாரபூர்வ இல்லங்கள் மூலம் வருவாய் ஈட்டுவதற்குத் திட்டம்!

கொழும்பு, செப்.15

முன்னாள் ஜனாதிபதிகளிடம் இருந்து கையகப் படுத்தப்பட்ட அதிகாரபூர்வ இல்லங்களை அர சாங்க அலுவலகங்களாகவோ அல்லது வரு வாய் ஈட்டும் நோக்கங்களுக்காகவோ பயன்ப டுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்தக் கட்டடங்களை எவ்வாறு பொருளாதார ரீதியாகப் பயன்படுத்தலாம் என்ற இறுதி முடிவை நிதி அமைச்சு எடுக்கும் என்று தெரிவிக்கப்படுகின் றது. அரசாங்க நிதியில் பராமரிக்கப்படும் இந்த சொத்தை பொதுமக்களுக்கு நேரடியாக பயன ளிக்கும் முதலீடுகளுக்குப் பயன்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்று பொதுப் பாது காப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித் துள்ளார். இதுவரை ஒரு குடும்பத்துக்கு மட்டுமே சொந்தமானதாக இருந்த இந்த மதிப்புமிக்க வீடுகள், முழு மக்களுக்கும் பயனளிக்கும் நடவ டிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவது மக்களுக் குக் கிடைத்த வெற்றி என்றும் அமைச்சர் குறிப் பிட்டுள்ளார். (அ,எ-இ)


# INVITATION FOR BIDS (IFB)
## PSDG 2025 & Council Fund 2025


1. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
2. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025.09.15. until 2025.09.29 from 09:00 hrs to 15:00 hrs.**
3. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of road construction/Building construction for grade mentioned in the table below. **" Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **the Chairman, Valikamam West Pradeshiya Sabha, Chulipuraam (T.P No: 021 225 0144, Fax No: 021 225 0144) during the period from 2025.09.15 until 2025.09.29 from 09:00 hrs to 14:00 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the table.** The method of payment will be by cash
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Procurement Committee, Valikamam West Pradeshiya Sabha, Chulipuraam at or before 10.00 hrs, 2025.09.30** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at **Head office, Valikamam West Pradeshiya Sabha, Chulipuraam** commencing at **10.00 am on 2025.09.19**
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 2025.09.15 until 2025.09.29 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.00 A.M on 2025.09.19 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.00A.M on 2025.09.30 | | | | | |
| S No | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee | Validity Period days | Bid Validity Date | Required Bid Security | | |
| | | | | | | | | Bid Security Amount | Bid Security Validity Date | |
| 01 | Reconstruction of Chulipuram area Roads ( School Branch Road, Kandmai Road 2nd Cross lane, Kallaivempady Branch Road, Mavady Moolai Road 8th lane Causeway) NP/14/41(17)/2/PSDG/05/2025 | 2.230 | 60 Days | C9& Above Roads | 3000.00 | 49days | 18.11.2025 | 23,000.00 | 16.12.2025 | |
| 02 | Renovation of Munankuppiddy Cemetery (Reconstruction of Burning shed & Retaining wall) NP/14/41(17)/2/CF/13/2025 | 3.017 | 60 days | C9& Above Building | 3000.00 | 49days | 18.11.2025 | 31,000.00 | 16.12.2025 | |
| 03 | Construction of Buring shed & Retaining wall at Velankadu Cemetery NP/14/41(17)/2/CF/14/2025 | 2.953 | 60 days | C9& Above Building | 3000.00 | 49days | 18.11.2025 | 30,000.00 | 16.12.2025 | |
| 04 | Renovation of Karachchi Hindu Cemetery NP/14/41(17)/2/CF/15/2025 | 1.167 | 45 days | C9& Above Building | 3000.00 | 49days | 18.11.2025 | 12,000.00 | 16.12.2025 | |

(CR 46038) E

**Chairman**
**Procurement Committee,**
**Valikamam West Pradeshiya Sabha, Chulipuraam**
**Jaffna.**

**15.09.2025**

வேலணைப் பிரதேச செயலக சமூக சேவைகள் அலகின் ஏற்பாட்டில் முதியோர்களுக்கான மருத்துவமுகாம் சரவணை தேவபுரம் ஸ்ரீசுப்பிர மணிய சுவாமி கோவில் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-25.9)


**வீடு வாடகைக்குத் தேவை**


யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்குத் தேவை. 4 பேர் வசிக்கக் கூடிய வீடு தேவை.

தொடர்பு:- 077 317 3156


# மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 07 . 1955

இறப்பு 14 . 09 . 2025



## அரியகுட்டி இராதாகிருஷ்ணன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் ஈவினையை வசிப்பிடமாகவும் தற்போது மல்லாகத்தில் வசித்து வரும் அரியகுட்டி இராதாகிருஷ்ணன் அவர்கள் நேற்று (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஜயாத்துரை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலபூபதி இன் பாசமிகு கணவரும், மதிமோகன் (விவசாய அமைச்சு வடக்குமாகாணம்), சந்திரமோகன் (பத்திராபதி பிளேற்றிங் கம்பனி), செல்வமோகன் (இலங்கை வங்கி வட்டுக்கோட்டை), றோசாந்தமோகன் (KSS Engineering & Construction) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவபாக்கியம், தனபாக்கியம் மற்றும் மகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அரசரட்ணம், தர்மரட்ணம், ஜெயபூபதி மற்றும் சீவரட்ணம், இராசபூபதி, செல்வபூபதி, பாலரட்ணம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சங்கீதா, சுதர்சினி, ஹம்ஷினி, சிறீதுவாரகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மிதுலன், அர்ச்சனா, பிரிஸ்ணிகா, அஹினாஸ், கஜவர்ணன், திரிநேத்ரா, சிறீவர்ஷினி, அபிஷாலி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பங்களா வீதி மல்லாகத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்துவரும்....

மனித உரிமைகள் பேரவையின் அதிகாரத்தை நீடிக்கும் வரைவுத் தீர்மானம், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்தநிலையில், இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள்தொடர்பான முன்னேற்றம் தொடர்பில் அடுத்த விரிவான அறிக்கை, 2027ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முன்வைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தீர்மானத்துக்கு, இலங்கை தொடர்பான முக்கியமான குழுஉறுப்பு நாடுகளான பிரிட்டன், கனடா, மலாவி, மொண்டினீக்ரோ மற்றும் வடக்கு மெசிடோனியா ஆகிய நாடுகள் ஆதரவை வழங்கவுள்ளன. (அ-எ-இ)

## தியாகதீபம்....

இன்று திங்கட்கிழமை தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் ஆரம்பமாகவுள்ளது.
பிரதான நினைவேந்தல் நிகழ்வு தியாகதீபம் திலீபன் உண்ணாநோன்பை ஆரம்பித்த நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் உண்ணாநோன்பு ஆரம்பித்த நேரமான காலை 9.45 மணியளவில் ஈகைச்சுடர் ஏற்றலுடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், சமநேரத்தில் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியிலும் ஈகைச் சுடரேற்றலுடன் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.
தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபியில் தொடர்ந்து பன்னிரெண்டு தினங்களும் நடைபெறும். நினைவுத்தூபியில் இறுதி நாள் நிகழ்வுகள் பேரெழுச்சியுடன் நடைபெறவுள்ளன. இதேவேளை, வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. புலம்பெயர் தேசங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (அ- எ-26,66)

## திலீபன் நாள்...

காட்சிப்படுத்தல் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அந்த இடத்தை இந்த ஆண்டு தங்களுக்கு வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாணம் மாநகரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இதனால் இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளது.
தியாகதீபம்திலீபனின்நினைவுத்தூபிக்கு அருகே கடந்த இரு ஆண்டுகளாக தியாகதீபம் திலீபனின் ஆவணக் காட்சிப்படுத்தல் நடத்தப்பட்டுவருகின்றது. திலீபன் தொடர்பான தகவல்கள், தியாகதீபம் திலீபன் உண்ணாவிரதம் இருந்த காலகட்டத்தில் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டு கடந்தகால வரலாற்றை அடுத்த சந்ததிக்குக்கு ஊடுகடத்தும் வகையில் அந்த ஆவணக் காட்சிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பெரும் எண்ணிக்கையான மக்கள் அந்த ஆவணக் காட்சிப்படுத்தலைக் கடந்தகாலங்களில் பார்வையிட்டிருந்தனர். இந்த ஆவணக் காட்சிப்படுத்தல் யாழ்ப்பாணம் மாநகர முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் தரப்பால் முன்னெடுக்கப்பட்டுவந்தது. இதே இடத்தில் இந்தத் தரப்பு மாவீரர் நாள் நினைவேந்தல்களையும் முன்னெடுத்துவந்தது.
இந்தநிலையில், அந்த இடத்தைத் தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் காலத்தில் தங்களுக்கு வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தது. அதேநேரம் கடந்த இரு ஆண்டுகளாக அந்த இடத்தில் நிகழ்வை நடத்துவதால் தங்களுக்கு இந்த ஆண்டும் அந்த இடத்தை வழங்க வேண்டும் என்று ஆவணக் காட்சிப்படுத்தலை மேற்கொண்டவர்களும் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆயினும் முதலாவதாகத் தாமே கோரிக்கைக் கடிதம் வழங்கியதால் அந்த இடத்தைத் தங்களுக்கே வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிடிவாதமாகக் கோரியது.
இந்த இழுபறி நிலைமையால் இரு தரப்பும் அந்த இடத்தை இரு பகுதிகளாகப் பிரித்து இரு தரப்பும் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று யாழ்ப்பாணம் மாநகரசபை தெரிவித்துள்ளது. ஆயினும் அதை நிராகரித்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி, யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் "டீல்" ஒன்றை முன்வைத்துள்ளது. தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் காலத்தில் அந்த இடத்தை விட்டுக்கொடுப்பதாகவும், ஆனால் மாவீரர் நாள் நினைவேந்தல் காலத்தில் அந்த இடத்தைத் தங்களுக்குத் தர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இதுவரை காலமும் கோப்பாயில் மாவீரர் நினைவேந்தலை முன்னெடுத்திருந்த நிலையில் இந்தக் கோரிக்கையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைத்துள்ளது.
இந்த நிலைமையால் தியாகதீபம் திலீபனின் ஆவணக் காட்சிப்படுத்தலில் இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளது. நினைவேந்தல் நிகழ்வுகளில் ஏற்படுத்தப்படும் இவ்வாறான குழப்பங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (அ,எ-26)

## அடுத்த...

மாகாணசபைத் தேர்தல் முறைமையை மாற்றும்சட்டம்நிறைவேற்றப்பட்டிருந்தாலும், எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதனால் பழைய முறைமையின் கீழ் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கும், அதற்குரிய சட்டத்திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது என்றும் தெரியவருகின்றது.
2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடர் எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. டிசெம்பர் மாத இறுதியில் பாதீட்டு கூட்டத்தொடர் முடிவடையும். அதன்பின்னர் மாகாணசபைத் தேர்தல் தொடர்பான சட்டத்திருத்தம் நிறைவேற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. சிலவேளை மார்ச் மாதத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கு ஏதேனும் சிக்கல்கள் இருப்பினர் தமிழ்-சிங்கள புத்தாண்டு முடிவடைந்த பின்னர் ஜூன் மாதம் தேர்தல் நடத்தப்படலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இதேவேளை, மாகாணசபைத் தேர்தலை இலங்கை விரைவில் நடத்தவேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரிலும் இது தொடர்பான வலியுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (அ,எ-44)

## சிறுமி...

'ரிக்ரொக்கில்' இந்தக் குடும்பஸ்தர் அந்தப் பகுதியில் பிரபலமானவர் என்றும், அவரது மனைவி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவர் சிறுமியுடன் தொலைபேசி உரையாடல்களை மேற்கொண்டதுடன், நேரிலும் சந்தித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுகின்றது.
சிறுமியை அவர் சுதந்திரபுரம் பகுதிக்கு அழைத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். அதையடுத்து குடும்பஸ்தர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன், சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
சிறுமியின் வாக்குமூலத்தின்படி சிறுமி மீது குறித்தநபர் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது. ஆயினும் சிறுமியும் விரும்பியே அவருடன் சென்றுள்ளாரெனவும் தெரியவந்துள்ளது. (அ,எ-19)

## வீட்டுக்குள்...

சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் குடத்தனை மேற்கைச் சேர்ந்த கோவிந்தசாமி உதயகலா (வயது-59), அவரது மகனான கோவிந்தசாமி கபில்ராஜ் (வயது-25) உதயகலாவின் மருமகனான கந்தசாமி நிதர்சன் (வயது-33) ஆகியோரே படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் கபில்ராஜ், நிதர்சன் ஆகிய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.
படுகாயங்களுக்குள்ளான இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது கார் ஒன்றில் சென்றவர்கள் இவர்களை முந்திச் சென்றதுடன் தொடர்ந்து வீதியின் குறுக்கும் மறுக்குமாக காரை செலுத்தி இடையூறான விதத்தில் பயணித்துள்ளனர். ஒரு சந்தர்ப்பத்தில் காரும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகின. அதையடுத்து இருதரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.
மறுநாளான நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 9 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்கள் வாள்கள் சகிதம் வீட்டுக்குள் புகுந்து வாள் முனையில் வீட்டை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன், கதவுகள், ஜன்னல்கள், கதிரைகள் உள்ளிட்ட தளபாடங்களை அடித்து உடைத்து சேதமாக்கியுள்ளனர். மோட்டார் சைக்கிளிலில் பயணித்த இருவர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதைத் தடுக்க முயன்றபோது ஒருவரின் தாயாரும் காயங்களுக்குள்ளாகியுள்ளார். சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக அந்தக் குடும்பத்தை அச்சுறுத்திய அந்த நபர்கள் இரவு 11 மணிக்குப் பின்னரே அங்கிருந்து சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸாருக்குதத் தகவல் வழங்கிய போதிலும் வாள் வெட்டுக்குழு வெளியேறிச் சென்றுபின்னரே அவர்கள் வந்தனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
வன்முறை கும்பல் மீதான அச்சம் காரணமாக குறித்த குடும்பத்தினர் சம்பவம் நடந்த வீட்டில் இருந்து பொருள்கள், கால்நடைகள் என்பவற்றை ஏற்றிக் கொண்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை பாதுகாப்புத் தேடி இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். (அ,எ-100)

## வெப்பம்...

கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.
நேற்றுப் பிற்பகல் வளிமண்டலவியல் திணைக்களத்தால் இந்த எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ,எ-இ)

## உடைமையில்...

பாணத்தில் உள்ள பிரபல ஆடையகத்தின் தையலாளர் (ரெய்லர்) ஒருவரும் உள்ளடங்குகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தனபாலின் கீழ் இயங்கும் வடமாகாண குற்றத் தடுப்புப் பிரிவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். 40 வயதான சந்தேகநபர் ஒருவரிடம் இருந்து 11 கிராம் 900 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 54 வயதான சந்தேகநபர் ஒருவரிடம் இருந்து 16 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ26-20)

## ஹெரோய்னுடன்...

தகவலின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து 539 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.
இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றது. (அ,எ-26,20)

## சிறிநேசன்...

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் சிறு காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-சீ, 50)

## விபத்தில்...

லிங்கம் (வயது-72) என்பவரே உயிரிழுந்தவராவார். இந்த விபத்துச் சம்பவம் கடந்த 5ஆம் திகதி நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பளைக்குச் சென்றவர் மீண்டும் திரும்பியபோது சைக்கிளில் பயணித்தவருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். விபத்தில் படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ,எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் சேவை பரிமாணத்துக்கு ரூ. 2,085 மில்லியன் ஒதுக்கீடு

**கொழும்பு,செப்.15**

**தபால் சேவையின் எதிர்கால நவீனமயமாக்கலுக்காக இந்த ஆண்டு 2,085 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று சுகாதாரம் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். காலி மாவட்டத்தில் பலப்பிட்டிய புதிய தபால் நிலையக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தபால் துறையின் நவீனமயமாக்கலின் கீழ் ஒதுக்கப்பட்ட 2,085 மில்லியனில் தபால் துறைக்குத் தேவையான லொறிகளைக் கொள்வனவு செய்ய 250 மில்லியன் ரூபாவும், வாடகை வாகனங்களை வாங்க 320 மில்லியன் ரூபாவும், உபதபால் நிலையங்களுக்கு நவீன தொழில்நுட்பத்தை இணைக்க தேவையான ஆயிரத்து 500 டெப் கணினிகளை வாங்குவதற்கு 180 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 225 கணினிகளைக் கொள்வனவு செய்வதற்காக 75 மில்லியன் ரூபாவும், புதுப்பிக்கத்தக்க சூரியசக்தியை ஓரளவுக்கு வழங்க 40 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய தபால் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 600 மில்லியன் ரூபா ஒதுக்கிடப்பட்டுள்ளதோடு, இதன்கீழ் 20 புதிய தபால் நிலையங்கள் நிர்மாணிக்கப்படும்.

தபால் நிலையங்களை நவீனமயமாக்குவதற்கு மேலும் 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, கண்டி மற்றும் நுவரெலியாவில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க தபால் நிலையங்கள் உட்பட 209 தபால் நிலையங்களை நவீனமயமாக்கத் தேவையான பணிகள் நடைபெற்றுவருகின்றன- என்றார். (ச-இ)



# வடமராட்சி பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், செப்.15

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் அலகின் அனுசரணையில் வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலகங்கள், பிரதேச கலாசாரப் பேரவை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், பண்பாட்டுப் பெருவிழா வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலர் திருமதி உமாமகள் மணிவண்ணன் தலைமையில் நெல்லியடி மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் விசேட அம்சமாக விக்னா இசைமன்றக் கலைஞர்களின் இசைக் கச்சேரியும், சதாபொன்ஸ் அஸ்விகா நடனாலய மாணவர்களின் ஒயிலாட்டமும், அமிர்தவாகினி இசைமன்ற மாணவர்களின் கிராமியப் பாடல்களும், கலாசார மத்திய நிலைய மாணவர்களின் கௌத்துவமும், குருசேத்திரா நடனாலய மாணவர்களின் கும்மிநடனமும், கம்பர்மலை கலாபூசணம் கந்தையா விஜயரத்தினம் கலாமன்றத்தினரின் காத்தவராயன் சிந்துநடைக் கூத்தும் இடம்பெற்றன. மிருதங்க வாத்தியக்கலைக்காக மாணிக்கம் சந்தப்பு, கூத்துக்காக முருகன் சிவபாதசுந்தரம், உடுக்கு வாத்தியக்கலைக்காக நாகமுத்து முத்துராசா, நாடகத்துக்காக சீனியன் ஆறுமுகம் ஆகியோர் "கலைஞான வாருதி" விருதைப் பெற்றுக் கொண்டனர். இலக்கியத்துக்காக பொன்னம்பலம் சுகந்தன் மற்றும் சின்னராசா உதயகுமார், இசை மற்றும் வாய்ப்பாட்டுக்காக திருமதி ஜெயபாரதி கௌசிகன் மற்றும் சிவபாதராசா மோகன்ராஜ் ஆகியோர் "கலைவாருதி" விருதைப் பெற்றுக்கொண்டனர். கவிதைக்காக மார்க்கண்டு செல்வதாஸ், ஹார்மோனியம் கீபோட் வாத்தியக்கலைக்காக மதியுகங்கன் மனுசங்கர் ஆகியோர் "இளங்கலைஞர்" விருதைப் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினராக வடமாகாணப் பண்பாட்டு அலகு பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்டச் செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் சுகுணலினி விஜயரட்ணம், மூத்த கலைஞர்களான கந்தன் பாலன், திருமதி சிவகுரு பேரின்பநாயகி, பிரதேச கலாசார பேரவையின் உப தலைவரும் விரிவுரையாளரு மான வேல்நந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-100)

# விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

யாழ்ப்பாணம்,செப்.15

சர்வதேச ஜனநாயக தினத்தை முன்னிட்டு, தேர்தல் ஆணைக்குழுவின் சேவைகளை அறிமுகப்படுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் திணைக்களங் கள் மற்றும் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அதற்கமைவாக நெடுந்தீவுப் பிரதேசத்துக் குட்பட்ட பாடசாலைகளில் கல்விகற்கும் 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் மற்றும் நெடுந்தீவுப் பிரதேசத்துக்குட் பட்ட ஒவ்வொரு கிராமஅலுவலர் பிரிவுகளிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நாளை முற்பகல் 9.30 தொடக்கம் முற்பகல் 11.15 வரை மாணவர்களுக்கான நிகழ்வு நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும், முற்பகல் 11.30 தொடக்கம் 12.45 வரை இளைஞர்களுக்கான நிகழ்வு நெடுந்தீவுப் பிரதேச செயலகத்திலும் இடம்பெறும். (க-27)

# காரைநகரில் இன்று நடமாடும் சேவை!

யாழ்ப்பாணம், செப்.15

காரைநகர்ப் பிரதேசசபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு "வளமான நாடு அழகான வாழ்க்கை மறுமலர்ச்சி நகரம்" என்ற தொனிப்பொருளில் நடத்தும் மாபெரும் நடமாடும் சேவை இன்று திங்கட்கிழமை காரைநகர் இந்துக் கல்லூரி நடராஜா மண்டபத்தில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை இடம்பெறவுள்ளது.

நடமாடும் சேவையில் காரைநகரை சேர்ந்த பல்வேறுபட்ட நிறுவனங்களினுடைய சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

காரைநகர்ப்பிரதேசசபையினுடைய ஆதன பெயர் மாற்றம், கட்டட அனுமதி, வியாபார உரிமம் பெற்றுக் கொள்ளல் போன்ற பல்வேறுபட்ட சேவைகளும் காரைநகர் பிரதேச செயலகத்தினுடைய பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளுதல், நலன்புரி நன்மைகள், வீட்டுத் திட்டங்கள், அபிவிருத்தி திட்டங்கள், தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பங்கள் போன்ற பல்வேறுபட்ட சேவைகளும் காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, ஆயுள்வேத மருந்தகம், இலங்கை வங்கி, கமநல சேவைத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை போன்ற பல்வேறுபட்ட நிறுவனங்களினுடைய சேவைகளும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் அன்றையதினம் இரத்ததான முகாம் நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்றும் காரைநகர் பிரதேசசபை தெரிவித்துள்ளது. (ச)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் உயரப்புலம், ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதி, பாரதி சனசமூக நிலைய முன்வீதியின் வலது புறத்தில் முதலாவது வீட்டுடன் 06 பரப்பு (நிலப்பரப்பு) காணியும் உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு : (WhatsApp) +94 770 460 604

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ் கோப்பாய் ராசபாதை வீதியில், Training college முன்பாக 22 பரப்பு காணி 20 அடி பாதையுடன் இரண்டு இரண்டு பரப்பாக பிரித்து விற்பனைக்கு உண்டு.

- குடியிருப்பு சூழல்
- நல்ல நீர்க் கிணறு
- செம்மண் தறைக்காணி
- பிரதான போக்குவரத்து சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 - மாலை 6.00 வரை

தொடர்புகளுக்கு:- விமல்

076 755 8606, 074 338 4481, 077 638 5683



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.